வேலூா் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3826/ இ3/2018 நாள் 24.07.2019

---

பொருள் : பள்ளிக்கல்வி – கல்வி தகவல் மேலாண்மை முறைமை (EMIS) மாணவர்களின் தகவல் தொகுப்பு (Student Profile) விவரங்களில் சில விவரங்கள் விடுபட்டுள்ளமை – அனைத்து கலங்களும் விடுதல் மற்றும் தவறின்றி உள்ளீடு செய்து முடிக்க கோருதல் – சார்பு.

பார்வை : 1. பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் 18.07.2019 அன்று நடைப்பெற்ற துறைத் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்த அறிவுரைகள்
2. சென்னை–6, தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1997/ஜெ2/2017, நாள் 19.07.2019

---

வேலூர் மாவட்டம் 2019–2020ம் கல்வியாண்டில் அனைத்து வகை அரசு/அரசு உதவிபெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் விவரங்களை கல்வி தகவல் மேலாண்மை முறைமை இணையதளத்தில் உள்ளீடு செய்தல் (Date Entry) மற்றும் மேம்படுத்துதல் (updation) ஆகிய பணியினை உடனுக்குடன் முடித்திடுமாறு அனைத்துவகைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

ஆனால் பல பள்ளிகளில் (Student Profile)–ல் உள்ளீடு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விவரங்களை தொகுக்கும் போது, மாணவர்கள் சார்ந்த விவரங்கள் தவறாகவும் (அ) தகவல் பதிவு செய்ய வேண்டிய பல்வேறு கலங்கள் பூர்த்தி செய்யப்படாமல் காலியாகவும் உள்ளது.

இந்நிலையில் 24.07.2019 நிலவரப்படி மாணவர்களின் சுயவிவரங்களில் விடுபட்டுள்ள விவரங்கள் வகுப்பு மற்றும் பிரிவு வாரியாக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் அனைத்து கலங்களும், விடுதல் இன்றியும் தவறுகளுக்கு இடமளிக்காவண்ணம் முழுமையான அளவில் கேட்கப்பட்டுள்ள விவரங்களுக்கு ஏற்ற சரியான பதிவுகளை இன்று (24.07.2019) மாலை 5.00 மணிக்குள் உள்ளீடு செய்து முடிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு
24.07.2019 நிலவரப்படி மாணவர்களின் சுயவிவரங்களில்
விடுபட்டுள்ள விவரங்கள் வகுப்பு மற்றும் பிரிவு வாரியாக

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூா்.

பெறுநர்

அனைத்து வகை அரசு /அரசு உதவி பெறும்
உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்

நகல்
1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர், காந்திநகர் காட்பாடி.
   தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
3. வேலூா் மாவட்டம். (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
   வேலூா் மாவட்டம்.

அ.சு